# ராயல்கேர் மருத்துவமனையில் எம்டிசிஆர்சியின் புதிய கிளை

ஒண்டிப்புதூர், ஜூலை 16–

தமிழகத்தில் அதிக அளவில் தசை சிதைவு நோயால் ஆண் குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருவதாக எம்டிசிஆர்சி தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் பி.ஆர்.லட்சுமி தெரிவித்து உள்ளார்.

கோவை அவினாசி சாலை, நீலம்பூரில் உள்ள ராயல் கேர் உயர் சிறப்பு மருத்துவமனையில், மரபணு பரிசோதனை, கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி மையமான எம்டிசிஆர்சி தனது நிறுவனத்தை துவக்கி உள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு, ஆரிய வைத்ய பார்மசியின் நிர்வாக இயக்குனர் பி.ஆர்.கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார்.

இதில், சிறப்பு விருந்தினர்களாக தேசிய மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் நிறுவன இயக்குனர் ஹிமாங்ஷூ தாஸ், கூகிள் ஹெல்த்தின் தலைவர் துஷ்யந்த் சின்ஹ ஜடேஜா, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் டாக்டர் ரிதேஷ் நாராயண்பூர், கௌரவ விருந்தினராக ராயல் கேர் உயர் சிறப்பு மருத்துவமனை நிறுவனரும் தலைவருமான மாதேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர்.



பேசும்பொழுது, ஏற்கெனவே குறிஞ்சி மருத்துவமனையில் கடந்த 8 ஆண்டுகளாக எம்டிசிஆர்சி தன்னார்வ தொண்டு நிறுவனம் செயல்பட்டு வந்தது.

அரிய வகை நோய்

தற்போது நீலம்பூரில் உள்ள ராயல் கேர் உயர் சிறப்பு மருத்துவமனையில் இடம் பெயர்ந்து உள்ளது சிறப்பான ஒன்றாகும். உலகம் முழுவதும் 3600 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசைசிதைவு நோய் ஏற்படுவதாக புள்ளி விவரம் கூறுகிறது.

ஆனால் இந்திய அளவில் தமிழகத்தில் அதிக அளவில் ...

கண்டறியப்பட்டுள்ளது.

இது அரிய வகை அநாதை நோய் என வரையறுக்கப்பட்டாலும் மரபுவழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. நாம் கற்ற அறிவியல், சமுதாயத்தை சென்றடைவதே எம்டிசிஆர்சியின் நோக்கம் என்றார்.

கலந்து கொண்ட குழந்தைகள் மகாகவி பாரதியார் வேடமணிந்து அவரது பாடல்களை பாடி...

Makkal Kural 16/7/19 மக்கள் குரல்